Since 1956

Alliance Finance Co. PLC

Making the world a better place through sustainable finance

**நோக்க அறிக்கை**

**“நிலைபேண்தகு நிதி ஊடாக உலகினை மிகச்சிறந்ததொரு இடமாக உருவாக்கவும்”.**

**பிரதான விடய ஆவணம்**

**நிலையான வைப்புக்கள், சேமிப்பு கணக்குகள் மற்றும் விரைவு பண கடன்கள்**

PEOPLE • PLANET • PROFIT

Sri Lanka's pioneering triple bottom line financial institution

# அறிமுகம்

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி (A.F.C) ஆனது 2011ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் பதிவுசெய்யப்பட்டு கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பொதுமக்களுக்கான கம்பனியாகும். 1956ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கையின் மிகப் பழமையான நிதிக் கம்பனியாக திகழ்வதில் நாம் மிகவும் பெருமையடைகின்றோம். கடந்த ஆறு தசாப்த காலங்களில் நான்கு தலைமுறையினர்களுக்கும் எம்மீது நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவிலான நிதிச்சேவைகளை வழங்குவதன் மூலம் வளர்ச்சியடைந்துள்ளோம்.

எமது கம்பனியானது நாடளாவிய ரீதியில் உள்ள எமது பரந்த கிளை வலைமைப்பின் ஊடாக நிலையான வைப்புக்களின் ஏற்புடைமை, சேமிப்பு கணக்குகள், விரைவு பண வசதிகள், குத்தகை, கடன்கள், தங்க கடன்கள், ரண் ஆயோஜன, காலனிலை நிதி, ரியல் எஸ்டேட், தானியக்க வர்த்தகம், ஒன்றிணைவு நிதி, இறக்குமதி/ வர்த்தக நிதி, பிணைகளை வழங்குதல், சிறிய நடுத்தர தொழில்முயற்சியாண்மை திட்ட நிதி, பங்குத் தொகுதி முகாமை, செயற்பாட்டு குத்தகை, ஈஸி ட்ரைவ் (வாகன கூலி), தானியக்க-உறுதி-போக்குவரத்து தீர்வுகள் மற்றும் ஏனைய தேவைப்படும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான நிதிச் சேவைகளை வழங்குகின்றது.

அறுபத்தைந்து வருட காலத்திற்கும் மேற்பட்ட வளர்ச்சியில், வாடிக்கையாளர்களின் திருப்தி எமது அடிப்படை இலக்காக காணப்படுவதுடன், எமது பணிக்குழுவினர் உங்களுக்கு மிகப்பொருத்தமான சேவையை வழங்கும் நோக்கில் செயற்படுகின்றனர்.

வாரநாட்களில் மு.ப 8.00 தொடக்கம் பி.ப 4.30 வரையும் சனிக்கிழமைகளில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 வரையும் எமது அர்ப்பணிப்புமிக்க ஊழியர்களின் விரைவான, சிநேகபூர்வமான மற்றும் தனித்துவமான சேவையை பெற எமது அலுவலகத்திற்கு வருகை தருமாறு அழைக்கின்றோம். உங்களது தேவைகளுக்கு ஏற்ப எமது மதிப்பார்ந்த வைப்பாளர்களுக்கு காலடியில் வினைத்திறனான சேவைகளையும் வழங்குகின்றோம். இச்சந்தர்ப்பமும் உங்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்கும் வாய்ப்பை எமக்குத் தரும் என நம்புகின்றோம்.

ISO 9001:2015, ISO 22301:2012, கடன் மதிப்பீடு - நிலையான தோற்றப்பாட்டுடன் இலங்கை மதிப்பீட்டு முகவர் நிலையம் [SL] BBB

PEOPLE • PLANET • PROFIT

Sri Lanka's pioneering triple bottom line financial institution

**பிரதான விடய ஆவணம் - நிலையான வைப்புக்கள்**

| பொருள் | முக்கிய அம்சங்கள், நன்மைகள் மற்றும் விடயத்தின் தன்மை | தேவைப்படும் ஆவணங்கள் | பிரதான விதிகளும் நிபந்தனைகளும் | உரித்தாகும் வட்டி விகிம்/ அபராதங்கள்/ கட்டணங்கள் |
|---|---|---|---|---|
| **நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பித்தல்** | 1. 2005 ஆம் ஆண்டு நிதிக் கம்பனி (வைப்புக்கள்) உத்தரவு இல: 1 இற்கமைய வைப்புக்கள் பெறப்படும்.<br>2. வைப்புக்களை தனிப்பட்டதாகவோ அல்லது இணைந்தோ மேற்கொள்ளலாம்<br>3. குறைந்தபட்ச வைப்புத்தொகை - ரூபா. 5,000/-<br>4. காலம் - 1 மாதம் தொடக்கம் 60 மாதங்கள் வரை<br>5. வட்டி செலுத்துதல் மாதாந்தம், காலாண்டு, வருடத்திற்கு இருமுறை, வருடாந்தம் அல்லது முதிர்ச்சியில்<br>6. வாடிக்கையாளர்கள் விரும்பினால் பெயர்குறிப்பிடப்பட்டவர்களை வழங்கலாம்.<br>7. வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப நிலையான வைப்புக்களின் வட்டியானது வாடிக்கையாளரின் எலாயன்ஸ் பினான்ஸ் சேமிப்பு கணக்கு, வங்கி கணக்குகள், ரொக்கம், காசோலை, அல்லது விரைவு ரொக்க வட்டி மீளப்பெறுகைக்கு தானாகவே பரிமாற்றம்செய்யப்படும்.<br>8. சேவை தேவைப்படும் | **<u>தனிநபர்</u>**<br>1. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>2. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>3. தே.அ.அ/ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச்சீட்டு. சிரேஷ்ட பிரசை அடையாள அட்டை<br>4. வாடிக்கையாளர் இரட்டை பிரசாவுரிமை பெற்றவராக இருப்பின், இரட்டை பிரசாவுரிமை சான்றிதழை வழங்குவது அவசியமாகும்.<br>5. AIT பிரகடனம் (பொருத்தமாயின்)<br>- (உள்நாட்டு வருமான திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அண்மைய சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு வட்டியின் மீதான AIT காணப்படும்.<br>6. அண்மைய வணிக பெறுமதி ஆதாரம் (03 மாத காலங்களினுள்)<br>வதிவிட முகவரி தே.அ.அ அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தில் இருந்து வேறுபட்டால், சகல வாடிக்கையாளர்களும் முகவரி சரிபார்ப்பிற்காக ஆவணச் சான்றை சமர்ப்பித்தல் அவசியமாகும். | 1. வைப்புச்செய்பவர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் அல்லது செல்லுபடியான அடையாள ஆவணத்தை உடைய வதிவிட வீசாவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.<br>2. வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது வைப்பை மீளப்புதுப்பிக்கும் சந்தர்ப்பத்தில் 60 வயதைப் பூர்த்திசெய்தவரை சிரேஷ்ட பிரசையாக கருத்திற்கொள்ள வேண்டும் என்பதுடன் 12 மாதங்கள் மற்றும் மேற்குறித்த வைப்பு காலப்பகுதிகளினுள் மேலதிக 0.5% ஓராண்டு வட்டிற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.<br>- கூட்டு வைப்புக்களில், சிரேஷ்ட பிரசை விகித மேம்பாட்டிற்காக சகல கணக்குரிமையாளர்களும் சிரேஷ்ட பிரசைகளாக இருத்தல் வேண்டும்.<br>3. செல்லுபடியான பதிவு ஆவணத்தை கொண்டிருக்கும் இலங்கையின் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்.<br>4. மின்னஞ்சல்/ தபால் | • தலைமை அலுவலகம், மிகவும் அருகிலுள்ள கிளை, அழைப்பு மத்திய நிலையம் (1321) அல்லது கம்பனி இணையத்தளம் www.alliancefinance.lkஇல் இருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.<br>• குறுஞ்செய்தி தகவல் சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.<br>• வீசா கடிதங்கள்/ மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வரிச் சான்றிதழ்களுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.<br>• FD சான்றிதழ் தொலைந்தமையால் புதிதாக வழங்கப்படும் FD சான்றிதழிற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைப்பாளர்களுக்கு தனித்துவமான வாடிக்கையாளர் சேவை மற்றும் அண்மித்த சேவை.<br>9. கூட்டு கணக்குடைமையாளர்களில் ஒருவர் அல்லது பலர் மரணிக்கும் தருவாயில், நிதி நிறுவனமானது சேவையை உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் கணக்குடைமையாளருக்கு/ கணக்குடைமையாளர்களுக்கு வழங்கும்.<br>10. வைப்புச் சான்றிதழ் பரிமாற்றம்செய்யப்படமாட்டாது. எனினும், முதிர்வு விடயத்தின் விண்ணப்பத்தின் ஏதேனும் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் படி வைப்பாளரை/ வைப்பாளர்களைப் பிரதிநிதித்துவம்செய்யும் வாரிசுகள், நிறைவேற்றுனர்கள், அல்லது பெயர்குறிப்பிட்டவர்கள் அதனை மீட்டிக்கொள்வதற்கான உரித்தைப்பெறுவர். | **<u>தனியுரிமை/ கூட்டு/ கூட்டுத்தாபனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனி</u>**<br>1. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>2. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>3. வணிக பதிவு<br>4. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் கடிதம்<br>5. படிவம் 20, 40 அல்லது 1, & 15<br>6. சபைத் தீர்மானம்<br>7. வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்/ படிவங்கள் (பயன்பெறும் உரிமையாளர்கள்/ மற்றும் பணிப்பாளர்கள்)<br>8. ‘‘பணிப்பாளர்களின்’’ தே.அ.அட்டையின் பிரதிகள்<br>9. இறுதி நலன்புரி உரித்து படிவம்<br>10. சங்கத்தின் சரத்தின் பிரதி<br><br>**<u>கழகங்கள், சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்</u>**<br>1. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>2. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>3. பதிவின் பிரதி | மற்றும் குறுஞ்செய்தி தகவல் சேவை ஊடாக கணக்குரிமையாளருக்கு முன்னரே மீளப்புதுப்பித்தல் அறிவித்தல் வழங்கப்படும்.<br>5. கணக்குப் புத்தகம்/ வங்கி கூற்றின் பிரதி ஒன்றுடன் உரியவாறு ஒப்புதலளிக்கப்பட்ட அசல் நிலையான வைப்புச் சான்றிதழை கம்பனிக்கு வழங்குவதன் மூலம் சகல மீளப்பெறல்களையும் மேற்கொள்ள வேண்டும்.<br>6. கணக்குரிமையாளர்களின் கோரிக்கையின் படி வீசா கடிதங்கள்/ மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் வரிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.<br>**7.** கணக்குரிமையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட எழுத்துமூல அறிவுறுத்தல்களின் பின்னர் மாத்திரமே, அசல் நிலையான வைப்பு விண்ணப்ப படிவத்தில் நியமிக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்டவரில் ஏதேனும் மாற்றத்தை திருத்தம்செய்யலாம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 11. நிலையான வைப்புக்களின் வட்டியானது நடைமுறையிலுள்ள வரி ஒழுங்குகளுக்கு உட்பட்டிருக்கும். கம்பனிகள்/ வேறு நிறுவனங்களால் ஈட்டப்படும் வட்டி வருமானமானது வருமான வரி மற்றும் வேறு ஏனைய அரசாங்க வரி விதிப்புக்களுக்கு உட்படலாம். | 4. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் கடிதம் மற்றும் தே.அ.அட்டைகளின் பிரதிகள்<br>5. குழு அல்லது சபைத் தீர்மானம்<br>6. வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்/ படிவங்கள் (பயன்பெறும் உரிமையாளர்கள்/ மற்றும் பணிப்பாளர்கள்)<br>7. நம்பிக்கை பத்திரம்<br>8. இறுதி நலன்புரி உரித்து படிவம்<br>9. தேவைப்படின், அற்றோணி தத்துவ சபை/ குழுவின் தீர்மானம்<br>10. சங்கத்தின் சரத்தின் பிரதி<br>11. தனிப்பட்ட கணக்குகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் இரு நிர்வாக அலுவலகர்கள், கையொப்பதாரர்கள், நிர்வாகஸ்தர்கள், நிர்வாக சபை அல்லது குழுவின் அங்கத்தவர்கள் அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளில் கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் கொண்டுள்ள எவரேனும் நபர் ஆகியோரின் அடையாளம்<br><br>**வெளிநாட்டு பிரசைகள்**<br>12. செல்லுபடியான வீசா விஸ்தரிப்புடன் செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>13. இலங்கை குடியிருப்பின் வணிக பெறுமதி ஆதாரம் | 8. முதிர்ச்சியடையும் திகதிக்கு முன்னர் அல்லது பின்னர் வைப்புத்தொகையை மீளப்புதுப்பித்தலின் விதிகளுடன் தொடர்பான ஏதேனும் மாற்றத்தை கம்பனிக்கு அறிவிக்கவில்லையாயின், அத்தகைய வைப்புத்தொகைகளானவை அவ்வாறு மீளப்புதுப்பிக்கப்படும் காலத்தில் நடைமுறையிலுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடைமுறையிலுள்ள விகிதங்களில் அதே காலப்பகுதியில் மீளப்புதுப்பிக்கப்படும். அதிகரித்த வட்டிக்காக முன்னைய அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படும். தானாக புதுப்பிக்கும் அறிவித்தல் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும்.<br>9. சான்றிதழ் தொலைந்தால், திருப்திகரமான விளக்கம் மற்றும் உரியவாறு முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட இழப்பீட்டு படிவத்தை விண்ணப்பபடிவத்துடன் கணக்குரிமையாளரிடமிருந்து (சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணியால் சான்றுப்படுத்தப்பட்டது) பெற்றதன் பின்னர் புதிய சான்றிதழ் வழங்கப்படும்.<br>10. ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வைப்புத்தொகை விண்ணப்பத்தின் மறுபக்கத்தை பார்க்கவும். சகல விதிகளும் நிபந்தனைகளும் ஒப்பந்தத்திற்கு முந்தைய கட்டத்தில் அறிவிக்கப்படும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| **முதிரா மீளப்பெறுகைகள்** | 1. முதிரா மீளப்பெறுகைகளை மேற்கொள்ளமுடியும் என்பதுடன் சகல உரிமையாளர்களிடமிருந்து பையொப்பங்களை பெறுதல் அவசியமாகும்.<br><br>2. முதிர்ச்சித் திகதிக்கு முன்னரான முதிரா மீளப்பெறுகைகள் வட்டி விகித சீர்படுத்துகைக்கு உட்பட்டிருக்கும். | 1. வைப்புத்தொகை வைத்திருப்பவரால் உரியவாறு வழங்கப்பட்ட அசல் நிலையான வைப்புச் சான்றிதழ்<br><br>2. நிதி அனுப்பப்படும் கணக்கு புத்தகம்/ வங்கி அறிக்கையின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 1. முன்னரே மீளப்பெறுகை மேற்கொள்ளப்படுமிடத்து, செலுத்தப்படக்கூடிய வட்டியானது குறைந்த விகிதத்தில் கணக்கிடப்படும். மாதாந்தம் வட்டி செலுத்தப்படும் வைப்புக்களாக இருக்குமிடத்து, அதிகமாக செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டியானது வைப்புத்தொகை முதலீட்டிலிருந்து மீளப்பெறப்படும்.<br>2. நிலையான வைப்புத் தொகையானது நிறுத்தப்படுவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் மீளப்பெறப்பட்டால் (நிறுத்தப்படும் திகதி உள்ளடங்கலாகவும், மீளப்பெறும் திகதியை உள்ளடக்காமலும்), வைப்பாளருக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. | இலங்கை மத்திய வங்கியினரால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் அபராத விகிதங்கள் தீர்மானிக்கப்படும். |
| **வைப்புத்தொகை காப்புறுதி செயலெல்லை** | பொருத்தமான வைப்புத்தொகை பொறுப்புக்கள் வைப்புத்தொகையாளருக்கு ரூபா. 1,100,000/- இற்கு மேற்பட்டதாக இலங்கை வைப்புத்தொகை காப்புறுதி திட்டத்தில் காப்பறுதிசெய்யப்படும். | நிறுவனத்தில் செயற்பாட்டுமிக்க வைப்புத்தொகைகள் | காப்பீட்டு கட்டணத் தொகை நிறுவனததினால் ஏற்கப்படும். | வாடிக்கையாளருக்கு கட்டணம் இல்லை. |
| **செயலற்ற கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட உடைமைகளின் கொள்கைகளும் செயன்முறைகளும்** | 1. வைப்புச்செய்தல்/ மீளப்பெறலுக்காக வைப்பாளர்/ POA நிறுவனத்துடன் கொடுக்கல்வாங்கல் செய்யவில்லையாயின்/ 10 வருடங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் தொடர்பை பேணவில்லையாயின் வைப்புத்தொகையானது செயலற்றதாகும்.<br>2. 10 வருடங்களுக்கு மேலதிகமாக வட்டி பெறுகையை தவிர கொடுக்கல்வாங்கலைக் கொண்டிராத வைப்புத்தொகைகள் செயலிழப்பு பிரிவுக்கு மாற்றம்செய்யப்படும். | 7. அசல் FD விண்ணப்பம், KYC, தே.அ.அட்டையின் பிரதி/ வணிக பெறுமதி ஆதாரம் மற்றும் FD கோவையில் உள்ள வேறு தொடர்புடைய ஆவணங்கள். | செயலற்ற/ கைவிடப்பட்ட வைப்புக்களானவை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நியம சட்ட செயன்முறையை பின்பற்றும். 10 வருடங்களுக்கு மேலதிகமாக வட்டி பெறுகையை தவிர கொடுக்கல்வாங்கலைக் கொண்டிராத அல்லது ஏதேனும் தொடர்பை பேணாத வைப்புத்தொகைகளானவை செயலற்றனாக கருதப்பட்டு 2011ஆம் அண்டின் 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் படி, இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படும். KYC படிவத்துடன் செயலிழப்பிலிருந்து விடுபட்ட விண்ணப்பத்தை பெற்றதன் பின்னர் செயலிழப்பிலிருந்து விடுவிக்கப்படும். | கட்டணம் இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| **வைப்புக்களுக்கு எதிரான கடன்கள் (விரைவு பணக் கடன்)** | 1. தங்களுக்கு ஏதாவது அவசர தேவை ஏற்படுமிடத்து தங்களின் நிலையான வைப்புச் சான்றிதழ்களை உறுதியாக வைத்து நிலையான வைப்புக்கு எதிராக கடன்களை பெற்றுக்கொள்வதற்கு இது வைப்பாளர்களை இயலச்செய்கின்றது.<br>2. அனுமதியளிக்கப்படுவதேற்ப 75% - 90% வரையான கடன் தொகை வழங்கப்படும்.<br>3. கடன் வட்டியானது நாளாந்த அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன் மீதி குறைப்பு முறையின் அடிப்படையில் மீளப்பெறப்படும்.<br>4. சிரமத்தை ஏற்படுத்தாத ஆவணங்கள்.<br>5. உரிய ஆவணங்களுடன் வரும் வாடிக்கையாளருக்கு 1 மணித்தியாலத்திற்குள் கடன் வழங்கப்படும்.<br>6. கடன் வட்டி மற்றும் மூலதனத்தை ஆரம்பிக்க நிலையான வைப்புக்களின் வட்டியானது உங்களுடைய விரைவு பண கடன் வசதிக்கு தானாகவே பரிமாற்றம்செய்யப்படும். | 1. முறையாக சான்றளிக்கப்பட்ட அசல் நிலையான வைப்புச் சான்றிதழ்<br>2. விரைவு பணக் கடன் விண்ணப்பப் படிவம்/ ஆரம்பித்தல் கடிதம்/ கடன் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்தல்<br>3. தே.அ.அ/ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச்சீட்டு. | 1. கடன் முழுமையாகத் தீர்க்கப்படும் வரை பெயர்குறிப்பிடப்பட்டவரை இரத்து செய்தல்.<br>**2.** கடன் வட்டியானது வைப்புத்தொகையின் மாதாந்த வட்டியிலிருந்து மீளப்பெறப்படும். மேலும் முதிர்ச்சியடைந்த கணக்குரிமையாளர்கள் உரிய திகதியில் தங்களது கடன் வட்டியை மாதாந்த அடிப்படையில் செலுத்துதல் அவசியமாகும்.<br>**3.** நிலையான வைப்புத்தொகை முதிர்ச்சியடைந்த பின்னரும் வாடிக்கையாளர் கடன் நிலுவைத் தொகையைத் தொடர விரும்பினால், விரைவு கடன் செலுத்தப்பட்டு, கிடைக்கக்கூடிய வட்டி விகிதத்துடன் மீண்டும் ஆரம்பிக்கப்படும். மேலும், எந்தவொரு கடன் வட்டியும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும். | • **கடன் விகிதம் = FD விகிதம் + 4%**<br>நிர்வாகத்தின் விருப்பப்படி குறைந்தபட்ச கட்டணமாக இருக்கும்.<br><br>• **Documentation charges**<br>கடன் தொகை ரூ.1 மில்லியனுக்கும் குறைவாக இருந்தால் ரூ.500 மற்றும் கடன் தொகை ரூ.1 மில்லியன் அல்லது அதற்கு மேல் இருந்தால் ரூ.1,000<br><br>*** நிர்வாகத்தின் விருப்பப்படி அனைத்து கட்டணங்களும் அவ்வப்போது மாறுபடும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| **சேமிப்பு கணக்கை ஆரம்பித்தல்** | 1. சிறுபராயத்தினர்/ தனிநபர்/ கூட்டு/ கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமானது.<br>2. வட்டியானது நாளாந்தம் கணக்கிடப்பட்டு மாதாந்தம் கணக்கிற்கு வரவுவைக்கப்படும்.<br>3. வட்டி விகிதங்களைக் குறைக்காமல் மாதத்திற்கு எத்தனை முறை வேண்டுமானாலும் வைப்புத்தொகையிடல்/மீளப்பெறுகை.<br>4. நிலையான உத்தரவு வசதி.<br>5. வசதியான பண வைப்புக்கள்/ பொது இலத்திரனியல் நிதி பரிமாற்றங்கள் (CEFT)/ மீளப்பெறுகைகள் மற்றும் நிதி பரிமாற்றங்கள்.<br>6. பொருத்தமான வைப்புத்தொகை பொறுப்புக்கள் வைப்புத்தொகையாளருக்கு அதிகபட்சம் ரூபா. 1,100,000/- இற்கு மேற்பட்ட நஷ்டஈடாக நாணய சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத்தொகை காப்புறுதி திட்டத்தில் காப்பறுதிசெய்யப்படும்.<br>7. சரியாக பூரணப்படுத்தப்பட்ட மீளப்பெறுகை படிவம் மற்றும் சேமிப்பு கணக்கு புத்தகத்துடன் தே.அ.அ, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து மீளப்பெறுகைகளை மேற்கொள்ள முடியும். | **பொது தனிநபர்**<br>1. தனிநபர்<br>2. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>3. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>4. தே.அ.அ/ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச்சீட்டு. சிரேஷ்ட பிரசை அடையாள அட்டை<br>5. வாடிக்கையாளர் இரட்டை பிரசாவுரிமை பெற்றவராக இருப்பின், இரட்டை பிரசாவுரிமை சான்றிதழை வழங்குவது அவசியமாகும்.<br>6. AIT பிரகடனம் (பொருத்தமாயின்) -(உள்நாட்டு வருமான திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அண்மைய சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு வட்டியின் மீதான AIT காணப்படும்.)<br>7. அண்மைய வணிக பெறுமதி ஆதாரம் (03 மாத காலங்களினுள்) -வதிவிட முகவரி தே.அ.அ அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தில் இருந்து வேறுபட்டால், சகல வாடிக்கையாளர்களும் முகவரி சரிபார்ப்பிற்காக ஆவணச் சான்றை சமர்ப்பித்தல் அவசியமாகும்.<br><br>**<u>தனியுரிமை/ கூட்டு/ கூட்டுத்தாபனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனி</u>**<br>1. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>2. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>3. வணிக பதிவு<br>4. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் கடிதம்<br>5. படிவம் 20, 40 அல்லது 1, & 15<br>6. சபைத் தீர்மானம்<br>7. வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்/ | 1. செல்லுபடியான அடையாள ஆவணத்துடன் 18 வயதிற்கு மேற்பட்ட எவரேனும் இலங்கை பிரசை<br>2. செல்லுபடியான பதிவு ஆவணத்தைக் கொண்டிருக்கும் இலங்கையின் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்<br>3. சாதாரண சேமிப்பு கணக்குகளுக்கான கணக்கை ஆரம்பிக்கும் ஆரம்ப வைப்புத்தொகை ரூபா. 500/- ஆகும்<br>4. சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கான கணக்கை ஆரம்பிக்கும் ஆரம்ப வைப்புத்தொகை ரூபா. 1000/- ஆகும்<br>5. கணக்கொன்றில் பராமரிக்க வேண்டிய குறைந்தபட்ச தொகை ரூபா. 500/- ஆகும். இல்லாவிட்டால், கணக்கிலிருந்து ரூபா. 50/- கழிக்கப்படும்.<br>6. கணக்கு புத்தகம் தொலைந்தால், திருப்திகரமான விளக்கம் மற்றும் உரியவாறு முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட இழப்பீட்டு படிவத்தை கணக்குரிமையாளரிடமிருந்து (சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணியால் சான்றுப்படுத்தப்பட்டது) பெற்றதன் பின்னர் புதிய கணக்கு புத்தகம் வழங்கப்படும்.<br>7. ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு சேமிப்பு விண்ணப்பத்தின் மறுபக்கத்தை பார்க்கவும்.<br>8. சிறுவர் 18 வயதை அடையும் வரை எவ்வித மீளப்பெறுகைகளும் அனுமதிக்கப்படமாட்டாது.<br>9. சிறுவர் சேமிப்பு கணக்குகளில் எத்தகைய மீளப்பெறல்களும் | 1. அண்மைய வட்டி விகிதங்களுக்கு எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனியின் இணையத் தளத்தை பார்வையிடவும் www.alliancefinance.lk<br><br>2. கணக்கை ஆரம்பித்தல், பராமரித்தல் மற்றும் கட்டணங்களை முடிவுறுத்துதல் இல்லை.<br><br>3. நிலையியற் கட்டளை வசதிகளுக்கு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.<br><br>4. கணக்கு புத்தகம் கட்டணமின்றி வடிக்கையார்களுக்கு வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படிவங்கள் (பயன்பெறும் உரிமையாளர்கள்/ மற்றும் பணிப்பாளர்கள்)<br>8. ‘‘பணிப்பாளர்களின்’’ தே.அ.அட்டையின் பிரதிகள்<br>9. இறுதி நலன்புரி உரித்து படிவம்<br>10. சங்கத்தின் சரத்தின் பிரதி<br><br>**<u>கழகங்கள், சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்</u>**<br>11. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட நிலையான வைப்பு விண்ணப்பபடிவம்<br>12. உரியவாறும் முழுமையாகவும் பூரணப்படுத்தப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்<br>13. பதிவின் பிரதி<br>14. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் கடிதம் மற்றும் தே.அ.அட்டைகளின் பிரதிகள்<br>15. குழு அல்லது சபைத் தீர்மானம்<br>16. வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் படிவம்/ படிவங்கள் (பயன்பெறும் உரிமையாளர்கள்/ மற்றும் பணிப்பாளர்கள்)<br>17. நம்பிக்கை பத்திரம்<br>18. இறுதி நலன்புரி உரித்து படிவம்<br>19. தேவைப்படின், அற்றோணி தத்துவ சபை/ குழுவின் தீர்மானம்<br>20. சங்கத்தின் சரத்தின் பிரதி<br>21. தனிப்பட்ட கணக்குகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் இரு நிர்வாக அலுவலகர்கள், கையொப்பதாரர்கள், நிர்வாகஸ்தர்கள், நிர்வாக சபை அல்லது குழுவின் அங்கத்தவர்கள் அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளில் கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் கொண்டுள்ள எவரேனும் நபர் ஆகியோரின் அடையாளம் | நிர்வாகத்தின் விருப்பின்படி பாதுகாவலரால் சமர்ப்பிக்கப்படும் செல்லுபடியான ஆவணங்களின் அடிப்படையில் சிறுவர் கணக்குரிமையாளரின் கல்வி மற்றும் மருத்துவம் முதலிய அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே அனுமதிக்கப்படும்.<br>10. 18 வயதை அடைந்ததன் பின்னர், சிறுவரானவர் பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளலாம் அல்லது உரிய வகையில் சாதாரண சேமிப்பு கணக்கொன்றுக்கு மாற்ற தனிப்பட்ட சேமிப்பு ஆணைகளை சமர்ப்பித்தல் அவசியமாகும்.<br>• **<u>செயலற்ற கணக்கு கொள்கை</u>**<br>1. செயலற்ற/ கைவிடப்பட்ட சேமிப்பு கணக்குகளானவை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தரநியம சட்ட செயன்முறையை பின்பற்றும்.<br><br>2. தொடர்ச்சியாக 10 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் ஏதேனும் ஒரு கணக்கு கணக்குரிமையாளரால் ஏதேனும் நிதியியல் செயற்பாட்டை (மீளப்பெறுகை அல்லது சேமிப்பு வைப்பு) மேற்கொள்ளப்படாமல் இருப்பின், அக்கணக்குகள் ‘‘செயலற்ற கணக்கு’’ ஆக வகைப்படுத்தப்பட்டு 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் படி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.<br><br>3. சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கு, செயலற்ற கணக்கு கொள்கையானது அக்கணக்கு சாதாரண சேமிப்பு (வயதுவந்தோருக்கான) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **வெளிநாட்டு பிரசைகள்**<br>1. செல்லுபடியான வீசா விஸ்தரிப்புடன் செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>2. இலங்கை குடியிருப்பின் வணிக பெறுமதி ஆதாரம்<br><br>**சிறுவர்**<br>1. பாதுகாவலர் அல்லது பெற்றோரால் கையொப்பமிடப்பட்ட உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவம்<br>2. உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்தல் (பெற்றோர் அல்லது சட்டரீதியாக நியமிக்கப்பட்ட பாதுகாவலரியால் சமர்ப்பிக்கப்பட்டது)<br>3. பிறப்புச்சான்றிதழின் உண்மைப்பிரதி<br>4. பெற்றோர்/ பாதுகாவலரின் தே.அ.அ/ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச்சீட்டு பிரதி<br>5. AIT பிரகடனம் (பொருத்தமாயின்)<br>6. அண்மைய வணிக பெறுமதி ஆதாரம் (03 மாத காலங்களினுள்) | கணக்காக மாற்றப்பட்டதன் பின்னர் பிரயோகிக்கப்படும். | |

பிரதான விடய ஆவணமானது எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி வ.த.க இனால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பிரதான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. மேற்குறித்த எவையேனும் விதிகள், நிபந்தனைகள் மற்றும் கட்டணங்களை எந்தவேளையிலும் திருத்துவதற்கான அதிகாரத்தை கம்பனி கொண்டுள்ளது.

## <u>முறைப்பாட்டை கையாளும் செயன்முறைகள்</u>

கம்பனியினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் அதிருப்திடைந்தால், பின்வரும் வழிகள் ஊடாக எமது சேவைகள் தொடர்பாக உங்களது முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

- உரிய கிளைகளின் கிளை முகாமையாளருக்கு கடிதம் அனுப்பப்படும் (தொடர்பு விபரங்கள் எமது இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன - www.alliancefinance.lk)
- வாடிக்கையாளர் முறைப்பாட்டை கையாளும் அலுவலருக்கு அனுப்பப்படும் கடிதம், இல 84, வார்ட் இடம், கொழும்பு 07
- தொலைபேசி இல. 0777761861 மற்றும் வாடிக்கையாளர் உடனடி அழைப்பு: 112 673673 (Ext.-195) என்பவற்றின் ஊடாக எமது வாடிக்கையாளர் முறைப்பாட்டை கையாளும் அலுவலரை தொடர்புகொள்ளல்
- கடிதம் அல்லது மின்னஞ்சலை இந்த info@alliancefinance.lk எனும் முகவரிக்கு அனுப்பலாம்

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி ஆனது முறைப்பாட்டை ஏற்று அம்முறைப்பாடு தொடர்பாக சுயாதீன மீளாய்வை மேற்கொள்ளும். – AFC உடன் தொடர்புகொண்டு வாடிக்கையாளர் கொடுக்கும் தகவல்களின் படி அலுவலக நாட்களான 7 நாட்களுக்குள் தீர்மானம் வழங்கப்படும். திருப்திகரமான தீர்வு கம்பனியினால் வழங்கப்படாவிட்டால், வாடிக்கையாளர் தனது முறைப்பாட்டை இலங்கையின் நிதிசார் குறைகேள் அதிகாரிக்கு அனுப்பலாம்.

**நிதிசார் குறைகேள்**
**அதிகாரி**
**143/ A, வஜிர வீதி,**
**கொழும்பு 05**
**தொலைபேசி இல. : 0112595624/0112595625**

**மின்னஞ்சல் - fosril@sltnet.lk**
**இணையம் - www.financialombudsman.lk**

**இலங்கை மத்திய வங்கி – நிதிசார் வாடிக்கையார் தொடர்பு திணைக்களம் (FCRD)**
**பணிப்பாளர்,**
**நிதிசார் வாடிக்கையாளர் தொடர்பு திணைக்களம் (FCRD)**
**இலங்கை மத்திய வங்கி (CBSL)**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு 01.**

PEOPLE • PLANET • PROFIT
Sri Lanka's pioneering triple bottom line financial institution